**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 109/2024**

**வாதி தரப்பு சாட்சி–2 ரம்யா – திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 13.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை:</u>**

1) எனது சாட்சிய வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி விபரங்களை வழக்கறிஞரிடம் யார் சொன்னது என்றால் வேலுசசாமி, அஞ்சலை இருவரும் சொன்னார்கள். எனது கணவர் பெயர் கிருஷ்ணமூர்த்தி. கிருஷ்ணமூர்த்தியின் தகப்பனார் பெயர் என்னவென்றால் ராசு. வேலுச்சாமிக்கு, ராசு தாய்மாமன் என்றால் சரிதான். என் கணவர் கிருஷ்ணமூர்த்தியும், வேலுச்சாமியும் மாமன், மைத்துனர் உறவு என்றால் சரிதான். வேலுச்சாமி எனது நெருங்கிய உறவினர் என்பதை எனது சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் 129 ல் உள்ளது. தாவா சொத்திற்கு எந்த திசையில் உள்ளது என்றால் வடக்குபுறம் உள்ளது. எனது சொத்திற்கு வேறு பாதை தனியாக உள்ளது என்றால் சரிதான்.

2) பிரதிவாதிகளுக்கு தாவா சொத்திற்கு கிழக்கே தனித்தனியாக வீடுகள் உள்ளது என்றும், அதில் அவர்கள் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்ணும், பிரதிவாதி நிலத்தின் சர்வே எண்ணும் வேறு வேறு என்றால் சரிதான். எனது சாட்சிய வாக்குமூலத்தில் தாவா சொத்தில் வேலுச்சாமி பெற்றோர் வீடு கட்டி குடியிருந்ததாக சொல்லியுள்ள நிலையில், வேலுச்சாமியின் பெற்றோர் பெயரில் பட்டா ஏதேனும் இருந்ததா என்றால் அதுபற்றி தெரியாது. எனது சாட்சிய வாக்குமூலத்தில் எவ்வளவு நாட்களுக்கு முன்பிருந்து அவர்கள் வசித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு மேற்படி விபரம் தெரியாது என்றால் சரிதான். நான்

குறிப்பிட்டுள்ள எனது விலாசத்தில் திருமணத்திற்கு பின்னிட்டு வசித்து வருகிறேன் என்றால் சரிதான்.

3) நான் மேற்படி விலாசத்தில் எவ்வளவு வருடங்களாக வசிக்கிறேன் என்றால் 15 வருடங்களாக வசித்து வருகிறேன். நான் திருமணமாகி வந்து 10 வருடங்களாக வாதி, பிரதிவாதிக்குள் எந்த பிரச்சினையும் இல்லை என்றால் சரிதான். வாதி வேலுச்சாமியின் வீடு கிழக்குபுற வாசல் வைத்து உள்ளது. வாதிகள் எந்த வழியாக சிமென்ட் சாலையை வந்தடைவார்கள் என்றால், அவர்கள் கிழக்குபுற வாசல் வழியாக வந்து சிமென்ட் சாலையை அடைவார்கள். பிரதிவாதிகளின் வீட்டிற்கு பின்புறம்தான் வாதிகளின் வீட்டு வாசல் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் வாதிகளின் வீட்டு வாசலை பாதையாக பயன்படுத்திய விபரம் தெரியுமா என்றால் அவர்கள் அவ்வாறு பயன்படுத்தவில்லை.

4) நான் சொல்வது தவறு என்றும், வாதிகள் எனக்கு உறவினர்கள் என்பதால் பிரதிவாதிகள் வாதியின் வாசலை பாதையாக பயன்படுத்தவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தங்களது வீட்டின் பின்புறம் கிழமேல் கம்பி வேலி போட்டுள்ளார்களா என்றால் அதுபற்றி தெரியவில்லை. நான் தற்போது எங்கு குடியிருக்கிறேன் என்றால் வேலுச்சாமியின் வீட்டிற்கு வடபுறம் வசிக்கிறேன். எனக்கு பிரதிவாதிகள் வேலி அமைத்துள்ள விபரம் தெரியும் என்றும், மேற்படி வேலி சம்பந்தமாக 2017ம் ஆண்டு காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்ட போது நானும் உடன் இருந்தேன் என்றால் சரியல்ல. வாதி, பிரதிவாதிகள் தங்களுக்கிடையே உள்ள பிரச்சினை குறித்து காவல்நிலையத்தில் இருதரப்பினரும் புகார் கொடுத்தனர் என்றால், வாதி கொடுத்த விபரம் தெரியும், பிரதிவாதிகள் கொடுத்தார்களாக என்று தெரியாது.

5) நான் சொல்வது பொய் என்றும், நானும் காவல்நிலையத்திற்கு வந்தேன் என்றால் சரியல்ல. சுமார் 5 வருடங்களுக்கு முன்பு இரண்டு தரப்பினர்களுக்கும்

இடையே பிரச்சினை ஏற்பட்டு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டதன் அடிப்படையில், நில அளவையரை வைத்து இருதரப்பினரின் நிலங்களும் அளந்து அத்துக்காட்டப்பட்டது என்றால் சரியல்ல, வாதிகளின் நிலம் மட்டும் அளந்து அத்து காட்டப்பட்டது. நான் சொல்வது தவறு என்றும் பிரதிவாதிகள் நிலம் அளந்து அத்துக்காட்டப்பட்ட பின்னிட்டுதான் பிரதிவாதிகள் வேலி அமைத்தனர் என்றால் சரியல்ல. நான் வாதி கேட்டுக்கொண்டதால்தான் எனது சாட்சிய வாக்குமூலத்தை தயார் செய்ததால்தான் எனக்கு மேற்படி விபரங்கள் தெரியவில்லை என்றால் சரியல்ல. வேப்பமரத்தை எப்போது வெட்டினார்கள் என எனது சாட்சிய வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், 2024ம் வருடம் வெட்டினார்கள்.

6) நான் குறிப்பாக சொல்லவில்லை. பிரதிவாதிகள் சட்ட நடைமுறைகளுக்கு உட்பட்டுதான் கழிவறை கட்டுவதற்காக வேப்பமரத்தை வெட்டினார் என்றும், மேற்படி விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மேற்படி வேப்பமரம் பிரதிவாதிகளின் வீட்டிற்கு பின்புறம் இருந்தது என்றால் சரிதான். மேற்படி வேப்பமரம் பிரதிவாதியின் வீட்டிற்கும் அவர் அமைத்துள்ள வேலிக்கும் இடையே தென்புறமாக இருந்தது என்றால், தென்புறமாக இருந்தது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கு எவ்வளவு விஸ்தீரணத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. நான் வாதிக்கு உறவினர் என்பதால் பிரதிவாதிகள் மீதுள்ள முன்விரோதம் காரணமாகவும், அவர்களுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், பிரதிவாதிகளும் எனக்கு உறவினர்கள்தான். வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிப்பதால்தான் இவ்வழக்கின் விபரங்கள் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**